ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1660/30 - 2010 ජුනි 29 වැනි අඟහරුවාදා - 2010.06.29

1660/30 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.- பீ. 11/80.

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் நியதிகளின்படி, உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரக் கவனிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிரிசேன,
சுகாதாரக் கவனிப்பு மற்றும் போஷாக்கு அமைச்சர்.

சுகாதாரக் கவனிப்பு மற்றும்
போஷாக்கு அமைச்சு,
கொழும்பு,
2010, யூன் 09.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2010 ஆம் ஆண்டின் உணவு (பொதியாக்குகின்ற ஆக்கப் பொருட்கூறுகளும் மற்றும் பொருட்களும்) பற்றிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) ஆளெவரும், வழமையானவையும் எதிர்நோக்கக்கூடியவையுமான நிலைமைகளின் கீழ் -

(அ) மனித உடனலத்துக்கு ஊறுவிளைவிப்பதாகவுள்ள ;

(ஆ) உணவின் ஓர்கனோலெப்டிக் (ORGANOLEPTIC) இயல்புகளைக் குறைக்கின்றதாகவுள்ள ; அல்லது

(இ) உணவின் தன்மையையும், பதார்த்தத்தையும், தரத்தையும் மாற்றுகின்றதாகவுள்ள

ஏதேனும் உணவுப் பொதியாக்குகின்ற பொருளை அல்லது ஆக்கப் பொருட்கூறை இறக்குமதி செய்தலோ, உற்பத்தி செய்தலோ, இடம்பெயர்த்தலோ, விற்பனைக்காக விளம்பரப்படுத்துதலோ, விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலோ, விற்பனை செய்தலோ, பொதியாக்குதலோ, களஞ்சியப்படுத்துதலோ, பயன்படுத்துதலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.

(2) உணவைப் பொதியாக்குவதற்காகப் பயன்படுத்துவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் பொருளை அல்லது ஆக்கப்பொருட்கூறை உற்பத்தி செய்கின்ற அல்லது இறக்குமதி செய்கின்ற ஆள் ஒவ்வொருவரும் -

(அ) "உணவுப் பாவனைக்காக" என்ற சொற்கள் அல்லது 1 ஆம் அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு எவையேனும் இயைபான சொற்கள் அல்லது குறிக்கப்பட்ட அடையாளம் ;

(ஆ) அதன் பயன்பாட்டில் பின்பற்றப்படவேண்டிய ஏதேனும் விசேட நிபந்தனை ;

(இ) தயாரிப்பாளரின் பெயரும் முகவரியும் அல்லது பதிவு செய்த வியாபாரச் சின்னம் ; அத்துடன்

(3) ஏதேனும் உணவைப் பொதியாக்குகின்ற பொருளை அல்லது ஆக்கப்பொருட்கூறை உற்பத்தி செய்யும் அல்லது இறக்குமதி செய்யும் ஆளெவரும் அத்தகைய பொருள் அல்லது ஆக்கப்பொருட்கூற்றின் மூலப்பொருள் சர்வதேச நியமங்களுக்கு இணங்க, தேவைப்பட்ட உணவுத் தரத்தை அல்லது படித்தரத்தை ஈடுசெய்கிறதென்று உற்பத்தியாளரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) உணவைப் பொதியாக்குவதற்காக ஏதேனும் பிளாத்திக்கு மென்தகடு பயன்படுத்தப்படுமிடத்து, பசைகளும் மைகளும் உட்பட மென்தகட்டின் எல்லா ஆக்கக்கூறுகளும், ஒவ்வொரு தனிப்பட்ட ஆக்கக்கூறினதும் உற்பத்தியாளரினால், சர்வதேச நியமங்களுக்கு இணங்கியொழுக, தேவைப்பட்ட உணவுப் படித்தரத் தினவாகவுள்ளனவெனச் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. (1) ஆளெவரும் -

(அ) இனாமலினால் அல்லது மெருகிடப்பட்ட மட்பாண்டங்களினால் தயாரிக்கப்பட்ட ஏதேனும் பொதியாக்குகின்ற பொருளில் அல்லது ஆக்கப்பொருட்கூறில் பொதியாக்கப்படும் ஏதேனும் உணவை, அத்தகைய பொருளில் அல்லது ஆக்கப்பொருட்கூறில் அல்லது அமிலத்துக்கு எதிர்ப்பாற்றலற்ற ஏதேனும் பொருளில் அல்லது ஆக்கப்பொருட்கூறில் தயாரிக்கப்பட்ட பொதியாக்கப்பட்ட, களஞ்சியபடுத்தப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட அல்லது வெளிக்காட்டிவைக்கப்பட்ட ஏதேனும் உணவுக்கும் பொதியாக்குகின்ற பொருளிலிருந்தான அல்லது ஆக்கப்பொருட்கூறிலிருந்தான நீர்மம் கசியவிடும் பொருள், இதற்கான II ஆம் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட பரீட்சிப்புப் பெறுபேறுகளின் நிலையளவுருக்களைத் திருப்திப்படுத்தினாலொழிய, அத்தகைய பொருள் அல்லது ஆக்கப்பொருட்கூறு, ஈயம், அன்டிமனி, ஆர்சனிக்கு, கட்மியம் அல்லது வேறேதேனும் நச்சுப் பதார்த்தத்தைச் செலுத்துவதற்கு இயன்றதாகவிருப்பின், அத்தகைய உணவை ;

(ஆ) வினைல் குளோரைட்டு மொனோமரின் 1 கி. கிராமுக்கு /1 மி. கிராம் என்பதற்கு மேற்பட்டதைக் கொண்டுள்ள பொலிவினைல் குளோரைட்டினால் ஆக்கப்பட்ட ஏதேனும் திடமான அல்லது ஓரளவு திடமான பொதியாக்கும் பொருளில் அல்லது ஆக்கப்பொருட்கூறில் அல்லது ஏதேனும் கலத்தில் பொதியாக்கப்பட்ட, களஞ்சியப்படுத்தப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்பட்ட விற்பனைக்கான ஏதேனும் உணவை ;

(இ) வினைல் குளோரைட்டு மொனோமரின் 1 கி. கிராமுக்கு 0.05 மி. கிராம் என்பதற்கு மேற்பட்டதை ஏதேனும் உணவு கொண்டிருப்பின், அத்தகைய உணவை ; அல்லது

(ஈ) ஏதேனும் சேதப்படுத்தப்பட்ட பொதியில் அல்லது கொள்கலத்தில் பொதியாக்கப்பட்ட, களஞ்சியப்படுத்தப்பட்ட, ஒப்படைக்கப்பட்ட அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்பட்ட ஏதேனும் உணவை

இறக்குமதி செய்தலோ, உற்பத்தி செய்தலோ, விற்பனைக்காகத் தயாரித்தலோ அல்லது விளம்பரப்படுத்துதலோ, விற்பனைக்கு வெளிக்காட்டிவைத்தலோ, விற்பனை செய்தலோ, பொதியாக்குதலோ, களஞ்சியப்படுத்துதலோ, பயன்படுத்துதலோ, ஒப்படைத்தலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியின் நோக்கத்துக்காக, "சேதப்படுத்தப்பட்ட" என்ற பதம் -

(அ) பொதியின் அல்லது கொள்கலத்தின் திடத்தன்மையை அல்லது உற்பத்திப்பொருளின் உடனலத்துக்கொத்த தன்மையை அல்லது இரண்டையும் பாதிக்கின்ற சிராய்வுறுதலையும் அல்லது உருக்குலைதலையும் உள்ளடக்கும் ; அல்லது

(ஆ) பொதியிலான அல்லது கொள்கலத்திலான துளையீட்டையும் அல்லது தின்னுமியல்பையும் அல்லது அதிலிருந்தான ஒழுக்கையும் அல்லது இவற்றின் இணைப்பையும் உள்ளடக்கும்,

4. ஆளெவரும் -

(அ) புதிய சித்திரசுப்பழங்கள் (CITRUS FRUITS) அவற்றின் பசுமையைத் தொடர்ந்தும் கொண்டிருப்பதற்கென அவற்றுக்குப் பூசப்பட்ட மேற்பூச்சுக்களில் ஏதேனும் வினைல் குளோரைட்டு பிளாத்திக்குகளை ; அல்லது

(ஆ) விற்பனைக்குரிய உணவுக்கான பொதியாக்கல், களஞ்சியப்படுத்துதல், ஒப்படைத்தல் அல்லது வெளிக்காட்டி வைத்தல் என்பவற்றுக்கான கொள்கலனாக அக்ரிலோநைட்ரைல் பிளாத்திக்குகளினால் ஆக்கப்பட்ட அல்லது அவற்றைக் கொண்டுள்ள ஏதேனும் போத்தலை, பெட்டியை, அல்லது வேறு கொள்கலத்தை

பயன்படுத்துதலோ அல்லது பயன்படுத்தப்படுதலைச் செய்வித்தலோ அல்லது பயன்படுத்துவதற்கு அனுமதித்தலோ ஆகாது .

5. (1) ஆளெவரும், பின்வருவனவற்றின் தயாரிப்பில், பொதியாக்குதலில், களஞ்சியப்படுத்துதலில், ஒப்படைத்தலில் அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலில் பின்வருவனவற்றைப் பயன்படுத்துதலோ அல்லது பின்வருவன பயன்படுத்தப்படுவதனைச் செய்வித்தலோ அல்லது பின்வருவனவற்றைப் பயன்படுத்துவதற்கு அனுமதித்தலோ ஆகாது :-

(அ) ஏதேனும் உணவுக்காக, ஏதேனும் உணவுசாராப் பொருளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஏதேனும் பொதி, உபகரணம், கொள்கலன் அல்லது கலன் ;

(ஆ) ஏதேனும் சீனிக்காக, மாவுக்காக அல்லது அரைத்த தானியத்துக்காக, வேறேதேனும் நோக்கத்துக்காக முன்னர் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் சாக்கு ;

(இ) உட்கொள்ளத்தக்க ஏதேனும் கொழுப்புக்காக அல்லது உட்கொள்ளத்தக்க ஏதேனும் எண்ணெய்க்காக, உட்கொள்ளத்தக்க கொழுப்பையும் உட்கொள்ளத்தக்க எண்ணெயையும் களஞ்சியப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பசுந்தீவனப் பதனக்குழிகள் அல்லது மிடாத்தொட்டிகள் தவிர, வேறேதேனும் நோக்கத்திற்காக முன்னர் பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் போத்தல் அல்லது உலோகக் கொள்கலன்;

(ஈ) ஏதேனும் உணவுக்காக, அவ்வுணவானது ஏதேனும் உணவுப் பாவனைக்குரிய தரத்தையுடைய மேலதிகச் சுற்றுறையில் பொதியாக்கப்பட்டிருந்தாலொழிய, வேறேதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பிளாத்திக்கு கொள்கலன் ;

(உ) ஏதேனும் அரிசிக்காக, வேறேதேனும் உணவுக்கென முன்னர் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் சடைச்சணல்சாக்கு அல்லது பொலிசாக்கு ;

(ஊ) போத்தலிலடைக்கப்பட்ட குடிநீருக்காக வேறேதேனும் நோக்கத்துக்கென முன்னர் பயன்படுத்தப்பட்டுள்ளனவும் அளவில் பதினெட்டு லீற்றர்களுக்குக் குறையாதனவுமான எவையேனும் கொள்கலன்கள் ;

(எ) ஏதேனும் உணவுக்காக, மீள்பயன்பாடு செய்யப்பட்ட பிளாத்திக்கிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள ஏதேனும் பொதி, உபகரணம், கொள்கலன் அல்லது கலன்.

(2) மரக்கறிகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக அல்லது பொதியாக்குவதற்காக முன்னர் பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் பெட்டி அல்லது பிரப்பங்கூடை, பழங்களைப் பொதியாக்குவதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் , இதனை மறுதலையாகவும் பயன்படுத்தப்படலாம்.

6. ஐந்தாம் ஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக, உணவைக் கொண்டுள்ள பொதியாக்கும் பொருள் அல்லது ஆக்கப்பொருட்கூறு இன்னோர் உணவுக்குரிய ஏதேனும் குறியீட்டை அல்லது சுட்டுத்துண்டைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய பொதியாக்கும் பொருள் அல்லது ஆக்கப்பொருட்கூறு, அத்தகைய குறியீட்டினால் அல்லது சுட்டுத்துண்டினால் காட்டப்பட்டவாறு, குறிப்பிட்ட அவ்வுணவுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென ஊகிக்கப்படுதல் வேண்டும்.

7. (1) ஆளெவரும், விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்பட்ட உணவில் அல்லது அத்தகைய உணவைக் கொண்டுள்ள பொதியில் ஏதேனும் விளையாட்டுச் சாமானை, நாணயக்குற்றியை அல்லது வேறேதேனும் பொருளை இடுதலாகாது -

ஆயின், எவரேனுமாள், எவ்வாறாயினும், ஏதேனும் உணவுடன் அல்லது அத்தகைய உணவைக் கொண்டுள்ள பொதிகளில் பின்வருவனவற்றை இடலாம் :-

(அ) உட்கொள்ளப்படவேண்டிய உணவின் விதந்துரைக்கப்பட்ட அளவை அளவிடுவதற்கான ஏதேனும் பொருள்; ஆயின் அத்தகைய பொருள் கிருமியழிக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) தெளிவான, ஒளிபுகவிடும் பொருளினாலானதும், ஒரு பொதியினுள் இடப்பட்டதுமான சுட்டுத்துண்டு நேரடி உட்கொள்ளுதலுக்குத் தயாராகவுள்ள உணவுடன் நேரடித் தொடர்பெதனையும் உடையதாகவிராத அல்லது அதனோடு தொடர்புடையதாகவரக்கூடிய சாத்தியமில்லாத அத்தகையவொரு முறையில் உட்புறச் சுற்றுறையினுள் பூரணமாக அடக்கப்படின், அச்சுட்டுத்துண்டு ; அத்துடன்

(இ) ஒட்சிசனை உறிஞ்சும் நோக்கத்துக்காகத் ஒட்சிசன் அகற்றிய இரும்புப் பொடியின் ஏதேனும் சிறுபை.

(2) இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட ஒட்சிசன் அகற்றிய இரும்புப் பொடி, ஒட்சிசன் உறிஞ்சியானது உணவை மாசுபடுத்தாத, பழுதாக்காத அல்லது அதனுட் செல்லாத அத்தகையவொரு முறையில் ஒரு சிறுபையில் அடக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒட்சிசன் அகற்றிய இரும்புப் பொடியின் சிறுபை, உணவுடன் நேரடித் தொடர்புடையதாக இருக்குமிடத்து, சிறுபையும் அதன் சுட்டுத்துண்டும். உணவை மாசுபடுத்தாத, பழுதாக்காத அல்லது அதனுட் செல்லாத பொருளினால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(4) ஒட்சிசன் அகற்றிய இரும்புப் பொடியின் சிறுபை, இவ்வொழுங்குவிதிகளுக்கான III ஆம் அட்டவணையின் குறித்துரைக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விடயங்களைக் கொண்டிருக்கலாம்.

(5) ஒட்சிசன் அகற்றிய இரும்புப் பொடியின் சிறுபை "ஒட்சிசன் உறிஞ்சி" என்ற சொற்களுடன் அல்லது அதே பயனை அல்லது ஒத்த பயனைக் கொண்டுள்ள சொல்லுடன் அல்லது சொற்களுடன் சுட்டுத்துண்டிடப்படுதல் வேண்டுமென்பதுடன், "உள்ளீடுகளைச் சாப்பிடவேண்டாம்" மற்றும் "இரும்புப் பொடியைக் கொண்டுள்ளது" என்ற சொற்கள் அதற்குப் பின்னர் இடப்படுதலும் வேண்டும்.

8. உணவைப் பொதியாக்குதலும் களஞ்சியப்படுத்தலும் என்ற தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளெவரும்,2005, சனவரி 19 ஆம் திகதியிட்ட 1376/9. ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகளுக்கும் திருத்தங்களுக்கும் இணங்கச் சுட்டுத்துண்டிடப்பட்ட ஒரு பொதியில் அல்லது கொள்கலத்திலல்லாது வேறுவகையாக அத்தகைய உணவைப் பொதியிடுதலோ அல்லது களஞ்சியப்படுத்துதலோ ஆகாது.


9. ஒற்றோபர் 14, ஆயிரத்துதொளாயிரத்துத் தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 788/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1993 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதலும் நானாவிதமானவையும்) ஒழுங்குவிதிகள், அத்தகைய ஒழுங்குவிதிகளின் 25 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

10. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

"பொதியாக்கும் பொருள் அல்லது ஆக்கப்பொருட்கூறு" என்பது, ஏதேனும் பொதியை, உபகரணத்தை, கொள்கலத்தை அல்லது கலனை உள்ளடக்கும்.

*அட்டவணை I*

(*ஒழுங்குவிதி 2 (2)*).



சின்னம்

## அட்டவணை II

( ஒழுங்குவிதி 3 (1) (a) ).

### பொதிகளுக்கான பரீட்சிப்பு

(அ) உணவைக் களஞ்சியப்படுத்துதற்காகப் பயன்படுத்தப்படும் பொதிகள், உபகரணங்கள், கொள்கலன்கள் மற்றும் கலன்கள் என்பவற்றுக்கான பரீட்சிப்பு.

1. *தயாரிப்பு :*

பரீட்சிக்கப்படவேண்டிய பொருள் அல்லது பண்டம், உராய் பொருளைக்கொண்டுள்ள நீரில் கழுவப்பட்டு சுத்தமான நீரில் அலசியெடுக்கப்படுதல் வேண்டும். பரீட்சிக்கப்படவுள்ள மேற்பரப்பு அதன் பின்னர் தொடப்படுதலாகாது. எஞ்சியுள்ள எல்லா நீரும், நீர் வீ/வீ இல் அசெட்டிக் அமிலத்தின் 4 சதவீதத்தைக் கொண்டுள்ள நீர்மம் கசியவிடும் கலவையினால் அதனை அலசியெடுப்பதன் மூலம் கழுவப்பட்ட பொருளிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

2. *பரீட்சிப்பு :*

பொருளானது, அதன் ஆகக்கூடிய கொள்ளளவுக்கு அறை வெப்ப நிலையில் நீர்மம் கசியவிடும் கலவையுடன் நிரப்பப்படுதல் வேண்டும்.

மாசுபடுத்துதலை ஆகக்குறைந்ததாக்குவதற்கு நீரை மூடிவிடுதல் வேண்டுமென்பதுடன், 24 மணித்தியாலங்களுக்கு அறை வெப்ப நிலையில் அது விட்டு வைக்கப்படுதலும் வேண்டும்.

24 மணித்தியாலக் காலப்பகுதிக்குப் பின்னர், நீர்மம் கசியவிடும் கலவை நன்றாகக் கிண்டப்பட்டு ஒரு பாகம் பகுப்பாய்வுக்காக அகற்றப்படுதல் வேண்டும்.

நீர்மம் கசியவிடும் பொருளானது, பீபீஎம் இல் கூறப்பட்ட பின்வரும் எல்லைகளுக்குமேல் அன்டிமனி, ஆர்சனிக்கு கட்மியம் அல்லது ஈயம் என்பவற்றைக் கொண்டிருத்தலாகாது:-

| Sb | As | Cd | Pb |
|---|---|---|---|
| 0.2 | 0.2 | 0.2 | 0.2 |

(ஆ) சமையலுக்காகப் பயன்படுத்தப்படும் பொதிகள், உபகரணங்கள், கொள்கலன்கள் மற்றும் கலன்கள் என்பவற்றுக்கான பரீட்சிப்பு.

1. *தயாரிப்பு :*

மேலே (அ) வில் உள்ளவாறு,

2. *பரீட்சிப்பு :*

பொருளானது பின்னர் $120^0$ சென்டிகிரேட்டுக்குச் சூடாக்கப்பட்டு கொதிக்கும் நீர்மம் கசியவிடும் கலவையுடன் (நீர் வீ/வீ இல் 4 சதவீத அசெட்டிக் அமிலம்) அதன் பயனுள்ள கன அளவின் மூன்றிலிரண்டுக்கு நிரப்பப்படுதல் வேண்டும். கலனானது அதன் சொந்த மூடியினால் ஏதேனுமிருப்பின் மூடிவிடப்பட்டு நீர்மம் கசியவிடும் கலவை 2 மணித்தியாலயங்களுக்குப் பொதுவாகக் கொதித்துக்கொண்டிருத்தல் வேண்டும். தொடர்புப் பரப்பளவு குறையாதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நீர்மம் கசியவிடும் கலவை காலாகாலம் சேர்க்கப்படுதல் வேண்டும். கலனானது பின்னர் 22 மணித்தியாலயங்களுக்கு அறை வெப்ப நிலையில் விட்டு வைக்கப்படுதல் வேண்டும்.

22 மணித்தியாலயங்களுக்குப் பின்னர், நீர்மம் கசியவிடும் கலவையின் கன அளவு கலத்தின் பயனுள்ள கன அளவின் மூன்றிலிரண்டுக்கு மீட்டுப் பெறப்படுதல் வேண்டும். நன்றாகக் கிண்டிய பின்னர் நீர்மம் கசியவிடும் கலவையின் ஒரு பாகம் பகுப்பாய்வுக்காக அகற்றப்படுதல் வேண்டும்.

நீர்மம் கசியவிடும் பொருளானது பீபீஎம் இல் கூறப்பட்ட பின்வரும் எல்லைகளுக்கு மேல் அன்டிமனி, ஆர்சனிக்கு, கட்மியம் அல்லது ஈயம் என்பவற்றைக் கொண்டிருத்தலாகாது :-

| Sb | As | Cd | Pb |
|---|---|---|---|
| 0.7 | 0.7 | 0.7 | 0.7 |

## *அட்டவணை III*

*( ஒழுங்குவிதி 7 (4) ).*

### குறைக்கப்பட்ட இரும்புப் பொடியின் சிறுபையினது உள்ளீடுகள்

(அ) கல்சியம் குளோரைட்டு ;

(ஆ) கல்சியம் ஹைதரரொக்ஸைட்டு ;

(இ) செயலூக்குவிக்கப்பட்ட கார்பன் ;

(ஈ) ஜிப்சம் ;

(உ) இரும்பு ஒட்சைட்டு ;

(ஊ) மக்னீசியம் ஹைதரரொக்சைட்டு ;

(எ) மக்னீசியம் ஸ்டியரேட்டு ;

(ஏ) பேர்லைட்டு ;

(ஐ) சாதாரண உப்பு ;

(ஒ) வெளிமக் கன்மகி ;

(ஓ) சியோலைட்டு.

*7 - 426*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.